சிவகங்கை மாவட்டம் பிள்ளையார் பட்டியில் ‘இந்தியா’ கூட்டணி சார்பில் போட்டியிடும் காங்கிரஸ் வேட்பாளர் கார்த்தி ப.சிதம்பரத்தை ஆதரித்து அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் வாக்கு சேகரித்தார். உடன் வேட்பாளர் கார்த்தி சிதம்பரம், எஸ்.மாங்குடி எம்.எல்.ஏ., திருப்பத்தூர் தெற்கு ஒன்றிய செயலாளர் எஸ்.சண்முக வடிவேல், பிள்ளையார் பட்டி வெள்ளைச்சாமி ஆகியோர் உள்ளனர்.

கட்சி பேதமின்றி வீடு இல்லாத அனைவருக்கும்

கலைஞரின் கனவு இல்லத் திட்டம் மூலம் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும்!

ஆத்தூர் தேர்தல் பிரச்சாரத்தில் அமைச்சர் ஐ.பெரியசாமி உறுதி!

திண்டுக்கல். ஏப்.2 -

தமிழகத்தில் நூறுநாள் வேலைதிட்டம் தொடர்ந்து கிடைக்க மத்தியில் ஆளும் பா.ஜ.க. அரசை அகற்ற வேண்டும் என்று சீவல்சரகு ஊராட்சியில் நடைபெற்ற தேர்தல் பிரச்சார கூட்டத்தில் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி பேசினார்.

கட்சி பேதமின்றி வீடு இல்லாத அனைவருக்கும் கலைஞரின் கனவு இல்ல திட்டம் மூலம் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும் என அமைச்சர் ஐ.பெரியசாமி உறுதியளித்தார்.

திண்டுக்கல் நாடாளுமன்றத் தொகுதியில் இந்திய கூட்டணியில் தமிழகத்தில் தி.மு.க. தலைமையிலான கூட்டணி கட்சி சார்பாக போட்டியிடும் சி.பி.எம். கட்சி வேட்பாளர் ஆர்.சச்சிதானந்தத்தை ஆதரித்து ஆத்தூர் மேற்கு ஒன்றியம் சீவல்சரகு ஊராட்சியில் தேர்தல் பிரச்சார கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்திற்கு ஒன்றிய செயலாளர்கள் பாறைப்பட்டி ராமன், பிள்ளையார் நத்தம் முருகேசன் ஆகியோர் தலைமை தாங்கினார்கள்.

தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆத்தூர் நடராஜன், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் பாஸ்கரன், ஆத்தூர் ஒன்றிய பெருந்தலைவர் மகேஸ்வரி, சி.பி.எம். செயற்குழு உறுப்பினர்கள் தோழர் கே.பாலபாரதி, மதுக்கூர் ராமலிங்கம்,

ஒன்றியச் செயலாளர் சூசைமேரி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

சீவல்சரகு ஊராட்சி மன்ற தலைவர் ராணி ராஜேந்திரன் வரவேற்றார்.

தேர்தல் பிரச்சார கூட்டத்தில் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஐ.பெரியசாமி பேசியதாவது:-

பிரதமராக மன்மோகன் சிங் இருந்தபோது நூறு நாள் வேலை திட்டம் சிறப்பாக செயல்படுத்தப்பட்டது. அப்போதைய முதல்வராக இருந்த முத்தமிழ் கலைஞர் அவர்கள் கிராமப்புற ஏழை எளிய மக்கள் பயன்பெறும் வகையில் நூறுநாள் வேலை திட்ட கூலியை குறைத்து கொடுக்கக்கூடாது என உத்தரவிட்டதால் அரசு நிர்ணயித்த கூலி ரூ.100 என்றால் ரூ.90 வரை வழங்கப்பட்டது. தற்போது திராவிட மாடல் நாயகன் மு.க.ஸ்டாலின் அவர்கள் தேர்தல் அறிக்கையில் மத்தியில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டவுடன் நூறு நாள் வேலை திட்ட கூலியாக நாள் ஒன்றுக்கு ரூ.400 வழங்கப்படும் என அறிவித்துள்ளார். நூறுநாள் வேலை திட்டம் என்பது ஏதோ பொழுதுபோக்கிற்காக கொடுத்த திட்டம் இல்லை கிராமப்புறங்களில் வறுமையை ஒழிக்க வேண்டும், வேலையில்லா திண்டாட்டத்தைப் போக்க வேண்டும் என்பதற்காக கொண்டுவந்த திட்டம்தான் நூறுநாள் வேலை திட்டம் இதை மத்தியில் ஆளும் மோடி தலைமையிலான பா.ஜ.க. அரசு நிறுத்த திட்டமிட்டு நிதி ஒதுக்குவதை குறைத்து வருகிறது.

நமக்கு வழங்க வேண்டிய 125ஆயிரம் கோடி நிதிக்கு பதிலாக 60 ஆயிரம் கோடியை மட்டும்தான் வழங்கியுள்ளது. இந்த நிதியை பிற திட்டங்களுக்கு மத்திய அரசு செயல்படுத்தி வருகிறது. நீங்கள் பாதுகாப்பாகவும், நிம்மதியாகவும் வாழ வேண்டும் என்றால் மத்தியில் ஆளும் பா.ஜ.க. அரசை தூக்கி எறிய வேண்டும் அதற்கு நீங்கள் சி.பி.எம். கட்சி சார்பாக போட்டியிடும் ஆர்.சச்சிதானந்தத்திற்கு அரிவாள் சுத்தியல் நட்சத்திரம் சின்னத்தில் வாக்களிக்க வேண்டும்.

திண்டுக்கல் நாடாளுமன்றத் தொகுதியில் போட்டியிடும் முக்கிய வேட்பாளர்கள் இருவரும் வெளி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் ஒருவர் சென்னையிலும், மற்றொருவர் சிவகாசியிலும் இருக்கிறார்கள். அவர்களுக்கு வாக்களித்தால் நீங்கள் எப்படி அவர்களை சந்தித்து உங்கள் குறைகளை கூற முடியும்.

அருகில் உள்ள கிராமமான ரெட்டியார்சத்திரத்தைச் சேர்ந்த சி.பி.எம். கட்சி வேட்பாளர் ஆர்.சச்சிதானந்தம் ஒரு ஏழை எளிய விவசாய குடும்பத்தைச் சேர்ந்தவர். மூன்றுமுறை ஊராட்சி தலைவராக தொடர்ந்து தேர்ந்தெடுக்கப் பட்டவர். அந்த அளவிற்கு ஊராட்சி நிர்வாகத்தை சிறப்பாக கவனித்தவர். அவருக்கு நீங்கள் வாக்களிப்பது மூலம் உங்கள் வீட்டில் உள்ள ஒருவருக்கு வாக்களிப்பதற்கு சமம். ஏப்ரல் 19ம் தேதியன்று வாக்குப்பதிவு இயந்திரத்தில் முதல் வேட்பாளராக உள்ள ஆர். சச்சிதானந்தம் அவர்களுக்கு அரிவாள் சுத்தியல் நட்சத்திரம் சின்னத்தில் வாக்களித்து அமோக வெற்றிபெற செய்வதன்மூலம் மத்தியில் ஆளும் பா.ஜ.க. அரசு தூக்கி எறியப்படும். கேஸ், பெட்ரோல் விலையும் குறையும். இது உறுதி.

இப்பகுதியைச் சேர்ந்த அருந்ததியல் காலனியில் வீடுகள் சேதம் அடைந்திருப்பதாக மனு கொடுத்திருக்கின்றனர். அவர்களின் வீடுகளை பராமரிக்க வீடு ஒன்றுக்கு ரூ.1.5லட்சம் ஒதுக்கீடு செய்யப்படும். இதுதவிர இப்பகுதியில் தொழிலாளர் நல மருத்துவமனை கட்டிக் கொடுக்கப்படுவதோடு கலைஞரின் கனவு இல்லம் திட்டம் மூலம் வீடு இல்லாதவர்களுக்கு கட்சி இன பேதமின்றி வீடுகள் கட்டிக்கொடுக்கப்படும் முதற்கட்டமாக இந்த ஆண்டே தமிழகம் முழுவதும் ஒருலட்சம் வீடுகள் கட்டுவது உறுதி. இதற்கான பணிகள் தேர்தல் முடிந்த பின்பு தொடங்கும்.

இவ்வாறு அமைச்சர் பேசினார்.

திண்டுக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. அவைத் தலைவர் வழக்கறிஞர் காமாட்சி, சி.பி.எம். கட்சி மாநில செயற்குழு உறுப்பினர்கள் கே.பாலபாரதி, கனகராஜ், மதுக்கூர் ராமலிங்கம், சி.பி.எம். ஒன்றியச் செயலாளர் சூசைமேரி, மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் பாஸ்கரன், தெற்கு மாவட்ட விடுதலைச் சிறுத்தைகள் கட்சி செயலாளர் தமிழரசன், மாவட்டச் செயலாளர் மைதீன்பாவா, மாவட்ட தொண்டரணி துணை அமைப்பாளர் கும்மம்பட்டி விவேகானந்தன், பஞ்சம்பட்டி மணி, மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி துணை அமைப்பாளர் பாறைப்பட்டி வாஞ்சிநாதன், சி.பி.ஐ. கட்சி மாவட்டச் செயலாளர் ஏ.பி.மணிகண்டன், ரெட்டியார்சத்தி ரம் வடக்கு ஒன்றிய தி.மு.க. செயலாளர் மணி, சி.பி.எம். கட்சி மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள் வசந்தாமணி, செல்வராஜ், ஆசாத், மாவட்ட குழு உறுப்பினர் சி.குணசேகரன், மாமன்ற உறுப்பினர்கள் நெல்லை சுபாஷ், ஆனந்தன், மாவட்ட கவுன்சிலர் பத்மாவதி, ஒன்றியக் குழு உறுப்பினர்கள் வண்ணம்பட்டி காணிக்கைசாமி, வக்கம்பட்டி காணிக்கைராஜ், செல்வி காங்கேயன், பாப்பாத்தி, ஜோதி மலைச்சாமி, ஒன்றிய இளைஞர் அணி துணை அமைப்பாளர் கண்ணதாசன், மாவட்ட பிரதிநிதி ஆரியநல்லூர் தங்கவேல் மற்றும் மகளிர் அணியினர், இளைஞர் அணியினர் பலர் கலந்துகொண்டனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

ஜி.எம். ஷா

ஏப்ரல் 2 (2014)



கன்னியாகுமரி மாவட்டக் கழகச் செயலாளராக 1959ல் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டார். 1993ஆம் ஆண்டு மாவட்ட பொறுப்புக்குழு தலைவர், 1999ஆம் ஆண்டு மாவட்டப் பொறுப்பாளர் ஆகிய பொறுப்புகளை ஏற்று திறம்பட பணியாற்றியவர்.

மேலும் கழக பொதுக்குழு, செயற்குழு, சொத்து பாதுகாப்புக்குழு, உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினராக பொறுப்பு வகித்தவர்.

1965 முதல் 1990 வரை மற்றும் 1996ஆம் ஆண்டு முதல் 2001ஆம் ஆண்டு வரை தொடர்ந்து தொடர்ந்து 30 ஆண்டுகள் வடக்கு சூரங்குடி ஊராட்சி தலைவராக மூன்று முறை போட்டியின்றி தேர்வு செய்யப்பட்டு மக்கள் நலப் பணியாற்றியவர்.

1976ஆம் ஆண்டு அவசரநிலைக் காலத்தில் மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டு சிறையில் இருந்துள்ளார். மேலும் கழகம் அறிவித்த அனைத்து அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

தலைவர் கலைஞர் அவர்கள் 2010ஆம் ஆண்டு நடைபெற்ற முப்பெரும் விழாவில் தலைமைக் கழகத்தின் சார்பில் “கலைஞர் விருது” வழங்கி சிறப்பித்தார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

சங்கரன் கோவில் சட்டமன்றத் தொகுதி

தேர்தல் பணிக்குழு நிர்வாகிகள்!

மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா அறிவிப்பு!

சங்கரன் கோவில் சட்டமன்ற தொகுதி தேர்தல் பணிக்குழுவில் நியமிக்கப்படும் மாநில, மாவட்ட நிர்வாகிகள் மற்றும் மாவட்ட அணிகளின் அமைப்பாளர், துணை அமைப்பாளர் விவரம்.

பெயர்	பொறுப்பு	தொலைபேசி எண்.
ச.தங்கவேலு EX MP	தலைமை செயற்குழு உறுப்பினர்	9442314234
கோ.பத்மநாதன்	மாவட்ட அவைத்தலைவர்	8870634972
சங்கை இல.சரவணன்	மாவட்ட கழக பொருளாளர்	9894258420
ஜோ.ராஜதுரை	மாவட்ட துணை செயலாளர்	9750167329
சு.புனிதா	மாவட்ட துணை செயலாளர்	6374887139
சங்கை பா.மாரிச்சாமி	பொதுக்குழு உறுப்பினர்	9750796272
மா.பராசக்தி	பொதுக்குழு உறுப்பினர்	7904570311
த.மகேஸ்வரி	பொதுக்குழு உறுப்பினர்	9360859928
உமா மகேஸ்வரி	நகர் மன்ற தலைவர்	9566910113
ராயல் கார்த்திக்	மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்	9171111224
சரவணன்	மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்	9942299898
S.M.மாரிராஜ்	மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்	9597580058
இராஜராஜன்	மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்	9655092288
செய்யது இப்ராஹிம் (எ) அன்சாரி	மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்	7010485934
உதயகுமார்	மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர்	9965387589
சிவசங்கரி	மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர்	8667248011
அப்பாஸ் அலி	மாவட்ட தொண்டர் அணி அமைப்பாளர்	8925275715
பிரேம்குமார்	மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு அணி அமைப்பாளர்	9750119865
குருவசந்த்	மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர்	8072804459
பசுபதிபாண்டியன்	மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர்	9941945093
மு.சந்திரன்	மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர்	9500975029
அமிதாப்	மாவட்ட அயலக அணி அமைப்பாளர்	9500486990
முருகன்	மாவட்ட அமைப்புச்சாரா ஓட்டுநர் அணி அமைப்பாளர்	9443555819
அழகுதுரை	மாவட்ட சுற்றுசூழல் அணி அமைப்பாளர்	9585386341
மு.முத்துராமலிங்கம்	மாவட்ட வழக்கறிஞர் அணி தலைவர்	9942149933
இரா.காளிராஜ்	மாவட்ட வழக்கறிஞர் அணி து.அமைப்பாளர்	9159969911
க.பாஸ்கர் சிங்	மாவட்ட பொறியாளர் அணி து.அமைப்பாளர்	7418644092
அ .வெள்ளைச்சாமி	மாவட்ட விவசாய அணி து.தலைவர்	9865282609
ம. சங்கரபாண்டியன்	மாவட்ட விவசாய அணி து. அமைப்பாளர்	8012461511
மு.குருசாமி	மாவட்ட ஆதிதிராவிடர் அணி து. அமைப்பாளர்	8870530161
ம.சிவசங்கரநாராயணன்	மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி துணை அமைப்பாளர்	8122113980
காளிதாஸ்	மாவட்ட ஓட்டுனர் அணி து.தலைவர்	9442883688
அன்புமணிகணேசன்	மாவட்ட மகளிர் அணி தலைவர்	9443582152
சின்னத்துரை	மாவட்ட அயல்நாட்டவர்அணி து.அமைப்பாளர்	9159788512
செ.பிரவீன்குமார்	மாவட்ட தொண்டரணி அணி து.அமைப்பாளர்	7200459178
ரா.பாண்டித்துரை	மாவட்ட சிறுபான்மை து.அமைப்பாளர்	9442149766
கு.முனியசாமி	மாவட்ட ஆதிதிராவிடர் து.அமைப்பாளர்	8056493831
ச.முருகன்	மாவட்ட தொண்டராணி து.அமைப்பாளர்	9994250867
ப.சரவணன்	மாவட்ட தொழிலாளர் அணி து.அமைப்பாளர்	7397713759
மதியழகன்	மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி துணைஅமைப்பாளர்	9659293919
அண்ணாமலை	மாவட்ட மகளீர் துணை தலைவர்	9597644646
உமாதேவி	மாவட்ட மகளீர் தொண்டரணி து.அமைப்பாளர்	7806869866
M.பிரபாகரன்	மாவட்ட வழக்கறிஞர் அணி து.அமைப்பாளர்	9842939384
சு.குமார் சங்கர்	மாவட்ட நெசவாளர் அணி து.அமைப்பாளர்	9843058050
ல.மனோகர்	மாவட்ட மீனவர் து.அமைப்பாளர்	9865562806
க.கணேசன்	மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு அணி து.அமைப்பாளர்	9698272821
மா.சந்திரசேகரன்	மாவட்ட சுற்று சூழல் அணி து.அமைப்பாளர்	9087675641
கிருஷ்ணசாமி	மாவட்ட தொண்டர் அணி துணை அமைப்பாளர்	8903202382
ஞானையா எழிலன்	மாவட்ட சிறுபான்மையினர் அணி துணைதலைவர்	9487560359
த.சீனிவாசன்	மாவட்ட விவசாய தொழிலாளர் அணி து.அமைப்பாளர்	8675867501
சு.காளிராஜ்	மாவட்ட ஓட்டுனர் துணைஅமைப்பாளர்	9488020959
சி.மாரிமுத்து	மாவட்ட மீனவர் துணைஅமைப்பாளர்	9095850029
ராஜ் (எ) கருப்பசாமி	மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு தலைவர்	99442028276
Kss. மாரியப்பன்	மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு அமைப்பாளர்	9894966131
குருசாமி	மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு துணை அமைப்பாளர்	8870530161
முனியசாமி	மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு துணை அமைப்பாளர்	8086493831
கலைச்செல்வன்	மாவட்ட விவசாய தொழிலாளர் அணி அமைப்பாளர்	9486481812
முருகன்	மாவட்ட விவசாய தொழிலாளர் அணி து.அமைப்பாளர்	9750210454
மு. சரவணன்	மாவட்ட விவசாய தொழிலாளர் அணி து.அமைப்பாளர்	9487173301
ஜோதிராஜ்	மாவட்ட வர்த்தக அணி தலைவர்	9486019243
சிற்றரசு	மாவட்ட வர்த்தக அணி துணை அமைப்பாளர்	9443154646
ஜான் பிரிட்டோ	மாவட்ட வர்த்தக அணி துணை அமைப்பாளர்	9486212752
பூ.மாரியப்பன்	மாவட்ட வர்த்தக அணி துணை அமைப்பாளர்	9894123294
செந்தில்குமார்	மாவட்ட வர்த்தக அணி துணை அமைப்பாளர்	9524920402
PAS. ஆதி	மாவட்ட வர்த்தக அணி துணை அமைப்பாளர்	9486641316
ராஜவேல் ரத்தினம்	மாவட்ட தொண்டராணி அணி துணை அமைப்பாளர்	9789645039
ரா. கிருஷ்ணசாமி	மாவட்ட தொண்டராணி அணி துணை அமைப்பாளர்	8903202382
செ. பிரவீன் குமார்	மாவட்ட தொண்டராணி அணி துணை அமைப்பாளர்	7200459171
வெ. சின்னத்துரை	மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு அணி துணை அமைப்பாளர்	9159788512
முத்துப்பாண்டி	மாவட்ட தொண்டராணி அணி துணை அமைப்பாளர்	9659381068
ச.ராஜேந்திரன்	மாவட்ட தொழிலாளர் அணி துணை அமைப்பாளர்	9443556054
லட்சுமணன்	மாவட்ட தொண்டராணி அணி துணை அமைப்பாளர்	9362410162
T. ராஜாஆறுமுகம்	மாவட்ட தொண்டராணி அணி துணை அமைப்பாளர்	9865086687
சங்கர குற்றாலம்	மாவட்ட தொண்டராணி அணி துணை அமைப்பாளர்	9944090282
K.R.N. வீரமணி	மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர்	7373449726
செல்வி	மாவட்ட மருத்துவ அணி துணை அமைப்பாளர்	7867968090
சுதா	மாவட்ட மருத்துவ அணி துணை அமைப்பாளர்	9842939384
அன்னலட்சுமி	மாவட்ட மகளீர் தொண்டரணிது.அமைப்பாளர்	9688542933
புஷ்பவள்ளி	மாவட்ட மகளீர் தொண்டரணி து.அமைப்பாளர்	7402407573
பா. செல்வராஜ்	மாவட்ட இலக்கிய அணி துணை அமைப்பாளர்	9842768886
மு. கணேசன்	மாவட்ட இலக்கிய அணி துணை அமைப்பாளர்	9842162654
கா. வெள்ளத்துரை	மாவட்ட இலக்கிய அணி துணை அமைப்பாளர்	7401444666
ம. ஜெயக்குமார்	மாவட்ட வழக்கறிஞர் அணி து.அமைப்பாளர்	9865380131
க. பாலசுப்பிரமணியம்	மாவட்ட விவசாய அணி தலைவர்	8056734556
மா. முத்துப்பாண்டியன்	மாவட்ட விவசாய அணி து.அமைப்பாளர்	9385683276
கே. கருப்பசாமி	மாவட்ட விவசாய அணி து.அமைப்பாளர்	9626622103
சு. திருமலை குமார்	மாவட்ட விவசாய அணி து.அமைப்பாளர்	8098210161
Dr.S. பேச்சியம்மாள்	மாவட்ட மருத்துவ அணி துணை தலைவர்	9488038362
போ. சங்கர்	மாவட்ட பொறியாளர் அணி தலைவர்	9688927560
அ. ரமேஷ்	மாவட்ட பொறியாளர் அணி துணை அமைப்பாளர்	8667290509
கு. விஜயகுமார்	மாவட்ட பொறியாளர் அணி துணை அமைப்பாளர்	9677500310
ச. கணேசன்	மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர்	8973634537
கார்த்திக்	மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர்	7397645065
மகாராஜன்	மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர்	9566476169
MSL. பிரேம்குமார்	கலை இலக்கிய பகுத்தறிவு அணி அமைப்பாளர்	9750119865
S. கொடி கோபாலகிருஷ்ணன்	கலை இலக்கிய பகுத்தறிவு அணி துணை அமைப்பாளர்	9841525131
அபூபக்கர்	கலை இலக்கிய பகுத்தறிவு அணி துணை அமைப்பாளர்	7708942757

ஈ.ராஜா எம்.எல்.ஏ.
செயலாளர்
தென்காசி வடக்கு மாவட்ட தி.மு.க.

கழக வேட்பாளர் அருண் நேருவை ஆதரித்து

பெரம்பலூர் நகரத்தில் வாசுகி ரமணன் வாக்குச் சேகரிப்பு!

பெரம்பலூர், ஏப். 2 –

பெரம்பலூர் பாராளுமன்ற தொகுதி கழக வேட்பாளர் அருண் நேருவை ஆதரித்து, பெரம்பலூர் நகரத்தில் உள்ள 7,8,9,10,11 மற்றும் அரனாரை ஆகிய இடங்களில், மாநில மகளிர் அணி ஆலோசகர் வாசுகி ரமணன் தி.மு.க.அரசின் சாதனைகளை எடுத்துக் கூறியும், மத்திய பா.ஜ.க.அரசு தமிழகத்திற்கு செய்து வரும் துரோகங்களை பட்டியலிட்டும் வாக்குகள் சேகரித்தார்.

இதில் மாவட்ட பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன், தலைமை செயற்குழு உறுப்பினர் வழக்கறிஞர் என்.ராஜேந்திரன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

பொதுக்குழு உறுப்பினர் எஸ்.அண்ணாதுரை, மாவட்ட பொருளாளர் செ.ரவிச்சந்திரன்,மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் து.ஹரிபாஸ்கர், துணை அமைப்பாளர்கள் டி.ஆர்.சிவசங்கர், அ. அப்துல்கரீம், மாவட்ட சிறுபான்மை அணி அமைப்பாளர் பாரி (எ) அப்துல்பாரூக், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் மகாதேவி ஜெயபால், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் தங்க.கமல்,

மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர் பா.ரினோபாஸ்டின், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் தி.ராசா,தொ.மு.ச.மாவட்ட கவுன்சில் தலைவர் கே.கே.எம்.குமார், தொ.மு.ச. மாவட்ட கவுன்சில் செயலாளர் ஆர்.ரெங்கசாமி, மாவட்ட தொண்டர் அணி அமைப்பாளர் க.ரமேஷ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.